RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# திருவானைக்காப் புராணம் - பெரியபுராணம் கோச்செங்கட் சோழ நாயனார் வரலாறு - ஒப்பீட்டுப் பார்வை

செ. யுவஸ்ரீ [அ, *], கு.செல்வி [அ]

[அ] தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு,

# Kochengat Chola Nayanar in the Thiruvanaikka Puranam and Periyapuranam: A Comparative Perspective

S. Yuvasri [a, *], K. Selvi [a]

[a] Department of Tamil, Dr. N.G.P. Arts and Science College, Coimbatore-641048, Tamil Nadu, India

* Corresponding Author: mailtoyuvasri@gmail.com

**ABSTRACT**

Tamil literary works serve as important sources for understanding the social and cultural life of the people of the periods in which they were composed. The Periyapurāṇam, associated with the period of the Bhakti movement, functions as a valuable record of the religious practices and devotional traditions of people belonging to diverse social backgrounds. Similarly, the Thiruvanaikkā Purāṇam, a later Purāṇic work, provides significant information concerning the social and religious life of its historical period. The history of Kochengat Chola Nayanar, a king of the Chola dynasty, is known through the Periyapurāṇam and the Thiruthondaththogai. The Thiruvanaikkā Purāṇam, composed by Kachiyappa Munivar in a later period, presents the life and religious history of this Nayanar in a somewhat more elaborate manner and from a distinctive perspective. In particular, Kachiyappa Munivar gives prominence to the religious service (thiruppani) undertaken by Kochengat Chola at the Thiruvanaikkā temple and develops the Purāṇic narrative around his contribution to the temple and Saivite tradition. The account also contains fascinating references to his previous birth and to extraordinary circumstances associated with his birth, which contribute to the distinctive religious and mythological character of the narrative. Furthermore, philosophical ideas and religious concepts are incorporated into the account of Kochengat Chola's life. These elements provide insights into the manner in which historical memory, devotional tradition, temple culture, and philosophical thought were integrated into later Tamil Purāṇic literature. This article therefore undertakes a comparative study of the life of Kochengat Chola Nayanar as portrayed in the Thiruvanaikkā Purāṇam and the Periyapurāṇam. It focuses particularly on differences in narrative treatment, previous-birth traditions, birth-related accounts, temple service, religious ideas, and philosophical elements, thereby highlighting the distinctive perspectives through which the two works construct the religious and cultural memory of Kochengat Chola Nayanar.

**Keywords:** Periya Puranam, Thiruvanaikka Puranam, Kochengatnan, Sambunayakar

## முன்னுரை

சமயம் என்னும் சொல் ‘சமைத்தல்’ என்ற சொல்லடியாகப் பிறந்தது. உணவைப் பக்குவப்படுத்தும் தொழிலைச் சமைத்தல் என்று குறிப்பிடுகிறோம். மனித மனத்தைப் பக்குவப்படுத்தும் தொழிலைச் சமயம் செய்கிறது. சிவனை முழு முதற்கடவுளாகக் கொண்டு இயங்கும் சைவ சமயம், பலவகையான புராணங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது. அடியார் பெருமக்கள் இறைவனைத் துதிக்கும் நோக்கோடு இறைவனுடைய மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் பெருமைகளை

எடுத்தியம்பும் நூல்களாகப் புராணங்களை ஆக்கியளித்தனர். இக்கட்டுரையில் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான கோச்செங்கட்சோழ நாயனாரின் புராணத்தில் இடம்பெறும் வரலாற்றுச் செய்திகள் பற்றி சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தின் வழியும் கச்சியப்ப முனிவர் இயற்றிய திருவானைக்காப் புராணத்தின் வழியும் ஒப்பீட்டு நோக்கில் ஆராயப்படுகிறது. பெரியபுராணத்தில் 17 பாடல்களில் சுருங்கிய அளவில் இடம்பெறும் கோச்செங்கணார் வரலாறு, திருவானைக்காப்புராணத்தில்,

1. ‘கெளாரணியப் படலம்’
2. ‘கோச்செங்கணார் வழிபடு படலம்’

என்னும் இரு தனிப் படலங்களில் கச்சியப்ப முனிவரால் விரிவாகப் பேசப்படுகிறது. இவ்விரு படலங்களிலும் கோச்செங்கணாரின் முற்பிறவித் தொன்மங்கள், மறுபிறவியில் அவர் இப்பூமியில் சோழமன்னனாய்ப் பிறப்பெடுத்தல், திருவானைக்கா கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் ஆகியவை குறித்த பின்புலங்களும் இடம்பெறுகின்றன. இவ்விரு நூல்களில் குறிப்பிடப்படிருக்கும் புராணச் செய்திகளும் இலக்கியக் குறிப்புகளும் எவ்வாறு ஒன்றியமைகின்றன என்பதும் வேறுபடுகின்றன என்பதும் இங்கு உற்றுநோக்கப்படுகிறது.

## சிலந்தி மற்றும் யானையின் பக்தித்திறம்

திருவானைக்கா திருக்கோயிலின் வெண்ணாவல் மர நிழலில் சம்புநாயகர் என வழங்கப்பெறும் பெருநீர்த்திரள் இறைவன் ஞானவடிவமாகிய இலிங்க மேனி தாங்கி வீற்றிருத்தல் பற்றி பெரியபுராணம் மற்றும் திருவானைக்காப் புராணத்தில் சிறு சிறு உவமைகள் சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

“ஞானச் சார்வாம். வெண்ணாவ லுடனேகூட நலம் சிறக்கப்

பானல் களத்துத் தம்பெருமான் அமரும் கோயில்" [பெரியபுராணம் பா.எண் 4214]

என்று வெண்ணாவல் மரமாம் திருத்தலமரத்தின் கீழ் நீலகண்ட ரூபமாய் விளங்கும் ஆனைக்கா அண்ணல் பற்றி பெரியபுராணம் எடுத்தியம்புகிறது.

முன்னொரு காலத்தில் வீரம் செறிந்த வெள்ளானை ஒன்று, சம்புநாயகப்பெருமான் மீதான அன்பு மேலோங்க, அனுதினமும் திருத்தலம் வந்தடைந்து, தீர்த்தங்களில் நீராடி, தம்மைத் தூய்மை செய்து கொண்டு, பின் அங்கு கிடைக்கப்பெறும் கோட்டுப்பூ, கொடிப்பூ நீர்ப்பூ முதலான பலவகைப் பூக்கள் கொண்டு சம்புநாயகரை வழிபாடு செய்வதை வழக்கமாகப் பின்பற்றி வந்தது. அதே சமயத்தில் இறைவன் வீற்றிருக்கும் வெண்ணாவல் மரத்தில் சிலந்தியொன்று வாழ்ந்து வந்தது. யானையைப் போன்றே சிவஞானம் பெற்றிருந்த அச்சிலந்தி, தன்னால் இயன்ற பணியாகிய வாய் நூலால் ஆலயம் அமைக்க மனதில் உறுதிபூண்டு, அம்முயற்சியில் ஈடுபடலானது.

பின்னர் சிலந்தி அவ்விடத்தைவிட்டு அகன்றபோது, யானை அவ்விடம் வந்து சிலந்திவலையானது இறைவன் மீதிருக்கக் கண்டு, மிகுசினம் கொண்டு, எச்சிலின் அடிப்படையில் ஆன அந்தச் சிலந்தி வலையைச் சிதைத்தெறிய நினைத்தது. இது ஓர் அசுத்த செயலென எண்ணிய அவ்யானை அவ்விடம் முழுவதையும் தூய்மை செய்தது.

“இரும்பெரிய கோயிலினைச் சிதைத்து இட

மெல்லாம் புனிதமியற்றி..” [திருவானைக்காப் புராணம் பா. எண் 1024]

பின்னர் சிலந்தி வந்து, தன் பெருமுயற்சியால் கட்டிய ஆலயம் சிதைக்கப்பட்டு இருப்பதைக் கண்டு வருந்தி, மீண்டும் முயன்று, சம்புநாதர் மேல் குப்பைகளும் சருகுகளும் விழாத வண்ணம் மீண்டும் தன் வாய்நூலால் ஆலயம் அமைத்தது. அடுத்த நாளும் யானை வந்து அச்சிலந்தியின் கோயிலைச் சிதைத்தது. இவ்வாறு நாள்தோறும் நடந்து கொண்டிருக்க, தம் வாய்நூலாலான கோயில் அழியக்காரணம் இவ்யானையே என்றறிந்த சிலந்தி, சினங்கொண்டு யானையின் துதிக்கையினுள் நுழைந்தது. தலை வரை சென்று யானையை கடுமையாகக் கடித்தது; யானை பேரொலியெழுப்பி வீழ்ந்து மடிந்தது. சிலந்தியும் யானையின் துதிக்கையில் இருந்து வெளியேற முடியாமல் உள்ளேயே இறந்துபட்டது. யானையின் பக்தித் திறத்தினால் நினைவூட்டப்பட்டு இவ்வாலயம் ஆனைக்கா, தந்திவனம், மாதங்கவனம், கெளாரணியம் என்ற பெயரிலெல்லாம் வழங்கப்பெறுகிறது. சிலந்திக்கோ, வாய்நூலால் கோயிலமைத்த் பழி நீங்க, சோழமன்னராய் மறுபிறவிப் பேறளித்தார் சம்புநாயகர். இவ்வுயர்வைப் பற்றி இராமலிங்க அடிகளாரும் தம் திருவருட்பா நூலில் குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவுகொள்ளத்தக்கது.

“வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னைஉயர்

கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே....” [திருவருட்பா, முதல் திருமுறை, விண்ணப்பக் கலிவெண்பா எண்: 384]

என்ற குறிப்பு இடம்பெறுகிறது.

## சிலந்தியானது சோழ மன்னனாய்ப் பிறப்பெடுத்தல்

மனிதரல்லாத பிறவிகளும் சிவஞானம் பெற்றுச் சிவபதம் அடையும் பான்மை பற்றி சைவப் புராணங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. அவ்வகையில்

"வேலுடைச் சோழனாய்ச் சிலம்பி வானவனும்

ஊனம் நீத்தது கேண்மின்..." [திருவானைக்காப் புராணம் பா.எண்: 1052]

என்று திருவானைக்காப் புராணத்தில் கச்சியப்பர் பாடும் திறம் இங்கு நோக்கத்தக்கது.

தில்லை என்னும் ஊரில் செங்கோல் வழுவாது அரசாளும் சோழ வேந்தனாம் சுபதேவன், கூத்தப்பெருமானிடத்தில் அடிமைபூண்டு சிவநெறியில் ஒழுகி வந்தான். அவனுடைய மனைவியாகிய கமலவதிக்கு நீண்ட நாட்களாகப் பிள்ளைப்பேறு இன்மை பற்றிப் பெரியபுராணத்தில் உரைக்கப்படுகிறது.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற" [குறள் எண் : 61]

என்று திருவள்ளுவர் உரைக்கும் திறம் இவ்விடத்தில் உற்று நோக்கத்தக்கது. ஆனால் திருவானைக்காப் புராணத்தில் கமலவதியாருக்குப் பிள்ளைப்பேறு இல்லை எனும் குறிப்பு எவ்விடத்திலும் கச்சியப்ப முனிவரால் குறிக்கப்பெறவில்லை.

"மக்கட்பேறு இன்மையால்

மாதேவி வரம் வேண்ட" [பெரியபுராணம் பா. எண்: 4209]

தில்லைக் கூத்தப்பெருமான் திருவருள் துணையால், கமலவதி கருவுற்றாள் என்று சுருக்கமாக உரைக்கிறார் சேக்கிழார். ஆனால் திருவானைக்காப் புராணத்தில், 1065- ஆம் பாடல் முதல் 1214 ஆம் பாடல் வரை ஒரு சிவஞானச் சம்பந்தமுடைய ஞானக்குழந்தையைக் கருவாகப் பெறுதற்குரிய வழிமுறைகளையும் விதிமுறைகள் பலவற்றையும் 149 பாடல்களில் சுபதேவனின் குருதேவரானவர் வகுத்துரைப்பதாகக் கச்சியப்பர் எடுத்துரைக்கிறார். உடல் தூய்மை, மனத்தூய்மை, கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள், செய்யப்பட வேண்டிய தான தருமங்கள் ஆகியவற்றைச் சிவாகமத்தின் அடிப்படையில் குருதேவர் குறிப்பிடுகிறார். கருவுறும் முன் செய்யவேண்டிய கிரியைகள் குறித்தும் கருவுற்றபின் ஒவ்வொரு மாதமும் செய்ய வேண்டிய கடமைகள் குறித்தும் விரிவாக இப்படலத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பலவகையான அறிவியல் குறிப்புகளும் இடையிடையே காணப்படுகின்றன. சான்றாக,

"இருதிங்கள் சுபதேவன் எழில்வயிற்றில் சுவையோடும் போய்

ஒருதிங்கள் புறங்கொடுக்கும் ஒளிமுகத்தாள் வயிற்றேகி

வருதிங்கள் ஒருபஃதும் வளர்ந்து பிறந்து..." [திருவானைக்காப் புராணம் பா.எண்: 1061]

என்ற செய்தி இடம்பெறுகிறது. அதாவது கருவானது சுக்கிலவடிவில் தந்தையாகிய சுபதேவன் வயிற்றில் 2 மாதங்களும் தாயாகிய கமலவதி வயிற்றில் 10 மாதங்களுமாக மொத்தம் 12 மாதங்கள் வயிற்றினுள் வளர்கிறது என்ற செய்தியினைக் கச்சியப்ப முனிவர் உரைக்கிறார். இதே செய்தியானது குறுந்தொகையில் 287 ஆம் பாடலில் காணப்படுகிறது.

"அம்ம வாழி தோழி காதலர்.....

முந்நாற் றிங்க ணிறைபொறுத் தசைஇ....." [குறுந்தொகை பா.எண்: 287]

முந்நால் திங்கள் [3 X 4=12 மாதங்கள்] நிறை கருப்பம் தாங்கிய மகளிர் போல என்னும் உவமை இடம் பெறுகிறது; இது மேற்காணப்பட்ட குறிப்பினையே எடுத்துரைக்கிறது. இவ்விடத்தில் இச்செய்தி ஒப்புநோக்கத்தது.

'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்' கருவானது செழித்து வளர, பத்தாம் மாதம் நெருங்கும் வேளையில், கருவானது இப்பூமியில் உதிக்கும் பொழுது வருகிறது. இதையறிந்த சுபதேவன் சோதிடர்களை அணுகிக் கேட்டபோது, 'இன்னும் ஒரு நாழிகை கழிந்து பிறந்தால் ஒப்பற்ற அரசனாக வருவான்' என்று கணியர்கள் கூற, இதை அறிந்த கமலவதியார், தன்னைக் கருவானது வெளியே வராதபடித் தலைகீழாகப் பிணைத்துத் தொங்கவிடும்படி பணிப்பெண்களுக்கு ஆணையிடுகிறாள்.

"வன்மதியிற் கமலவதி மற்றென்னைத் தலைகீழா

என்மணிநூபுரத் தாளின் யாத்தினித் தாக்குக என்றாள் " [திருவானைக்காப் புராணம் பா.எண்: 1225]

இதே செய்தி பெரியபுரணத்தில் இடம்பெறுவதைக் காண முடிகிறது. பின் சரியான வேளையில் ஒப்பற்ற திருமகன், சிவந்த கண்ணினனாய் [நீண்ட நேரம் தலைகீழாய்ப் பிணைக்கப்பட்டிருந்த காரணத்தால் கண்கள் சிவப்புற்றது] அரசாளும் அமைப்போடு தோன்றுகிறான். இம்மகவைக்கண்ட கமலவதி,

"மைக்கணுறு கமலவதி வளர் கோச்செங்கண்ணனோ" [திருவானைக்காப் புராணம் பா.எண்: 1227]

எனப் பேரன்பு பொங்கக் கூறுகிறாள். இதே குறிப்பு பெரியபுராணத்திலும்,

“இறவாது ஒழிவாள் பெற்றெடுத்து என்

கோச்செங்கண்ணானோ என்றாள்” [பெரியபுராணம் பா. எண்: 4211]

என்று கமலவதி கூறி இறந்துபட்டாள் என்று சேக்கிழார் குறிப்படுகிறார். ஆனால் மகப்பேற்றின்போது கமலவதி இறந்ததாக திருவானைக்காப் புராணத்தில் எக்குறிப்பும் காணப்படவில்லை. இவ்வாறு சிறு சிறு வேறுபாடுகளை ஆங்காங்கே காணமுடிகிறது.

## கோச்செங்கணாரின் திருப்பணி

பிற்காலத்தில் இச்சிறுபிள்ளை வளர்ந்து, சோழ அரசினைப் பலவகையில் விரிவுபடுத்தி நீதி தவறாது ஆட்சி செலுத்தி வரும் அரசனாகத் திகழ்கிறான். இந்நிலையில் முற்பிறவி நினைவானது, செங்கணார் மனத்தில் உதிக்க, திருவானைக்காவில் வீற்றிருக்கும் சம்புநாதரைக் காணச் செல்கிறார். அங்கு வெண்ணாவல் மர நிழலில் ஞானமே வடிவாகி இருக்கும் பிரானுக்கு அழகியதொரு திருக்கோயிலமைத்துத் திருப்பணி செய்ய அவரது மனம் துடித்தது. அவ்வண்ணமே கோயில் திருப்பணியினைச் செய்தார் என்று பெரியபுராணத்தின் வாயிலாகப் பெறமுடிகிறது. ஆனால் இதற்கான விரிவான துல்லியமான விளக்கத்தை திருவானைக்காப் புராணத்தின் வழியே அறியமுடிகிறது. திருவானைக்கா அண்ணலுக்குத் திருக்கோயிலமைக்க எண்ணிய கோச்செங்கணார், அப்பணியைத் தொடங்கினார். அப்போது இரவில் அடியார் வேடத்தில் கனவில் தோன்றிய சம்புநாயகர், "இவ்விருப்பத்தைக் கைவிடுவாயாக; எமக்குக் கோயிலமைக்க எண்ணிய தேவதச்சன் முன்பே எம்மை அடைந்து வரம் பெற்றான்; அவன் அமைத்த விமானம் ஆற்றினடியில் உள்ளது. அதைப் பெயர்த்து வந்து இவ்விடத்தில் அமைப்பாயாக !” என்று இறைவன் பணித்தார். விதித்த பணியைச் செய்ய சிரமேற்கொண்டு இயங்கினார் கோச்செங்கணார், அவ்வாறே விமானம் கோயிலில் பொருத்தப்பெற்றது; பின்னர் கோயிலுக்கான மண்டபம், திருச்சுற்றுகள் முதலானவற்றை அமைத்து ஆனைக்கா அண்ணல் வீற்றிருக்கும் கோயிலை முழுமையாக்கினார் கோச்செங்கணார்.

"மண்டபம் பிரகாரங்கள் வயங்கு கோபுரங்களாதி

விண்தொட விழைத்திட்டு எஞ்சும் விழுநிதி [திருவானைக்காப் புராணம் பா.எண்: 1273].

எனும் பாடலில் இச்செய்தியை அறியமுடிகிறது. இக்கோயில்பணி மட்டுமன்றி, 70க்கும் மேற்பட்ட திருக்கோயில்களுக்குப் பணிகளைச் செய்துள்ளார் என்ற குறிப்பும் அறியப்படுகிறது. சிலந்தியாய்ப் பிறவியுற்று சிவத்தொண்டு செய்து பின்னர் மன்னராய் இப்பூவுலகில் பிறந்து அரியபல திருப்பணிகள் புரிந்து நாயன்மார் பதவி பெற்று உய்ந்த அருமை அடியவராம் கோச்செங்கணார் வரலாற்றினை ஆராயுங்கால், பெரியபுராணத்தில் கிடைக்கப்பெறும் செய்திகள் சற்றே “சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்” என்னும் தன்மையில் அமைகிறது. திருவானைக்காப் புராணத்தில் நோக்குங்கால் விரிவான பல குறிப்புகளும் அவர்தம் வாழ்வியல் செய்திகளும் கிடைக்கப்பெறுகின்றன. பெரியபுராணத்தில் 17 செய்யுள்களிலும் திருவானைக்காப்புராணத்தில் மொத்தமாக 302 செய்யுள்களிலும் கோச்செங்கணார் புராணம் இருவேறு சைவப்புலவர்களால் எடுத்தியம்பப்பெற்றுள்ளது.

பலராலும் அறியப்படாத திருவானைக்காப் புராணம், கோச்செங்கணார் வரலாறு குறித்து இத்தகு விரிவான தகவல்களைத் தருவது மிகு பயனுடையதாக இருக்கிறது. இதன் மூலம் விளக்கமானதொரு வரலாற்றுப்புரிதலைப் பெற முடிகிறது. இதைப்போன்றே அனைத்து நாயன்மாரின் வரலாறுகளையும் உரைக்கும் தோற்றுவாய் நூலான பெரியபுராணத்தை கற்பதோடு நின்றுவிடாமல் அந்தந்தத் தலபுராணங்களைத் தேடிக் கற்குங்கால் விரிவான வரலாற்றுப் புரிதலும் முழுமையான கதையை அறிதலும் கிடைக்கப்பெறும் என்பது இவ்வாய்வின் வழியே பெறப்படுகிறது.

## தொகுப்புரை

பெரியபுராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றையும் பக்தி நயம் மிளர உரைக்கும் ஒரு தோற்றுவாய் நூலாகும். இதன் முதல் நூல் திருத்தொண்டத்தொகை மற்றும் வழிநூல் திருத்தொண்டர் திருவந்தாதியாக இருப்பினும் சற்றே விரிவான அடியார் வரலாற்றை அறிய உதவும் நூல் இதுவே ஆகும். கோச்செங்கட்சோழ நாயனார் புராணத்தை 17 பாக்களில் சுருக்கமாக உரைக்கும் பெரியபுராணம்

12 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூல். 18 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவானைக்காப் புராணம் கோச்செங்கணார் வரலாற்றைத் தெளிவுபட விரிவாக எடுத்துரைக்கிறது. இரு நூல்களையும் ஒப்பு நோக்கும்போது சிற்சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் கதையமைப்பில் ஒன்றியே நிற்கிறது. வரலாற்றை ஆய்வுக்குட்படுத்துகையில் காணப்படும் அந்தச் சில வேறுபாடுகள் புதிய தகவல்களைத் தமிழுலகத்திற்கு வழங்கி நிற்கிறது. கவிராட்சசர் என வழங்கப்படும் கச்சியப்பர் எண்ணிலடங்கா இலக்கிய உத்திகளை நூல் முழுமையிலும் கையாளுகிறார்; உவமை நயம், அணி நயம் முதலியன கற்போரை வியப்புக்குள்ளாக்குகின்றன. சேக்கிழார் படைத்த பெரியபுராணம் கோச்செங்கணார் வரலாற்றை சுருக்கமாகவும் நயம்படவும் உரைக்கிறது. கச்சியப்பர் முனிவரின் திருவானைக்காப் புராணம் கற்போர் வியக்கும் வண்ணம் கவிநயம் மேலோங்க, தெளிவுபட, விரிவான வரலாற்றை எடுத்தியம்புகிறது.

## References


வ.த. இராமசுப்ரமணியம், (2004) பெரியபுராணம்,திருமகள் நிலையம், சென்னை

கா.நாகராசு, திருவானைக்காப் புராணம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு

பரிமேலழகர் (2016) திருக்குறள், பழனியப்பா ப்ரதர்ஸ் பதிப்பகம், சென்னை

மூவர் (1980), தேவாரம் அருணா பதிப்பகம், சென்னை

வே.இரா. மாதவன், (1995) தமிழில் தலபுராணங்கள், பாவை பதிப்பகம், தஞ்சை

தலபுராணம், பேராச்சி கண்ணன், சூரியன் பதிப்பகம், சென்னை

உ.வே.சா. குறுந்தொகை, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License